## தொடர் மழை: நெல், வேர்க்கடலை பயிர்கள் நாசம்

First Published : 19 Nov 2010 04:07:37 AM IST



பொன்பாடி பகுதியில் தண்ணீரில் சாய்ந்து சேதமடைந்துள்ள நெற்பயிர்.

திருத்தணி, நவ. 18: திருத்தணி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் பெய்து வரும் தொடர் மழையால் நெல், வேர்க்கடலை பயிர் சேதம் அடைந்து விவசாயிகள் கடும் நஷ்டத்தை சந்தித்துள்ளனர்.

10 நாள்களுக்கு முன்பு "ஜல்' புயலால் திருத்தணி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் பலத்த மழை பெய்தது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. மேலும் பலத்த மழையால் விவசாயக் கிணறுகள், ஏரிகள் மற்றும் குட்டைகளில் ஓரளவுக்கு மழைநீர் நிரம்பியது.

ஏரிகளில் தண்ணீர் இருப்பு உள்ளதால் விவசாயிகள் நெல், வேர்க்கடலை பயிர் செய்வதற்காக நிலத்தை உழுது தயார்படுத்தியிருந்தனர். பெரும்பாலான விவசாயிகள் 5 நாள்களுக்கு முன்பு நிலத்தில் வேர்க்கடலை போட்டனர். வேர்க்கடலை பயிர் செய்தது முதல் தொடர்ந்து மழை பெய்து வருவதால், வேர்க்கடலை செடி முளைக்காமல் சேதம் அடைந்துள்ளது. இதில் பல விவசாயிகள் கடன் வாங்கி வேர்க்கடலையை பயிர் செய்தனர்.

அரசு நிவாரணம் வழங்குமா?: திருத்தணியை அடுத்த பொன்பாடி, முருகம்பட்டு, வி.கே.ஆர்.புரம், கொத்தகுப்பம், சிறுகுமி, தாடூர், வி.கே.என்.கண்டிகை, டி.சி.கண்டிகை, செருக்கனூர், ராமகிருஷ்ணாபுரம், மாம்பாக்கசத்திரம் உட்பட 30-க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகள் செய்த நெல், வேர்க்கடலை பயிர் தொடர் மழையால் சேதம் அடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சேதமடைந்த விவசாயிகளின் பயிர்களை நேரில் சென்று ஆய்வு செய்து, உரிய நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

பொன்பாடி பகுதியில் தண்ணீரில் சாய்ந்து சேதமடைந்துள்ள நெற்பயிர்.

**சிறுநகர் ஏரி உடைந்து நெல் பயிர்கள் நீரில் மூழ்கின**

First Published : 19 Nov 2010 09:05:20 AM IST

மதுராந்தகம், நவ.18: செய்யூர் தாலூகா, சிறுநகர் ஊராட்சியில் உள்ள பெரிய ஏரி உடைந்து தண்ணீர் வெளியேறி விவசாய நிலங்களில் புகுந்ததால் நெல் பயிர்கள் நீரில் மூழ்கின.

÷சிறுநகர் ஊராட்சியில் உள்ள 3 ஏரிகளில் பெரிய ஏரி நிரம்பி அதிகப்படியான வரத்து நீரால் ஏரியில் உபரி நீர் வெளியேறியது. அதைத் தொடர்ந்து நீரின் வரத்து அதிகமானதால் ஏரியின் கரைகள் பலமிழந்து உடைந்தன.

÷ஏரி உடைந்ததால் விவசாய நிலங்களில் நீர் புகுந்தது. இதனால் தற்போது நிலங்களில் பயிர் வைக்கப்பட்டுள்ள நெல் பயிர்கள் நீரில் மூழ்கின. மேலும்,தொடரந்து உடைப்பட்ட பகுதியிலிருந்து நீர் வெளியேறிக் கொண்டு இருக்கிறது. செய்யூர் தாசில்தார் லோகநாதன், பொதுப் பணித் துறை அலுவலர்கள் சிறுநகருக்கு சென்று ஏரியின் உடைந்த பகுதிகளை பார்வையிட்டு சீரமைக்கும் பணி மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**முட்டை விலை**

First Published : 18 Nov 2010 11:20:42 AM IST

நாமக்கல், நவ.17: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு ரூ.2.80. சென்னையில் ரூ.2.88.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.48. முட்டைக் கோழியின் விலை கிலோ ரூ.38.

**கால்நடை வளர்ப்புக்கு மானியத்துடன் கடன் திட்டங்கள்**

First Published : 18 Nov 2010 01:10:47 PM IST

திருவாரூர், நவ. 17: கால்நடை வளர்ப்பை ஊக்கப்படுத்தும் வகையில் மானியத்துடன் கூடிய சிறப்புக் கடன் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்றார் மாவட்ட ஆட்சியர் எம். சந்திரசேகரன். கால்நடை வளர்ப்போருக்கு மானியம் சார்ந்த அரசின் திட்டங்கள் செயல்படுத்துதல் குறித்த உயர்நிலை ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்குத் தலைமை வகித்து ஆட்சியர் பேசியது:
பால் சார்ந்த தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் சிறு பால் பண்ணை அமைக்க ரூ.5 லட்சம் வரையிலும், கன்றுகள் வளர்ப்புக்கு ரூ.4.80 லட்சம் வரையிலும், மண்புழு வளர்ப்புக்கு ரூ.20,000, 2,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யும் பால் பண்ணைகளுக்கு பால் கறக்கும் கருவிகள் வாங்குவதற்கு ரூ.18 லட்சம் வரையிலும், பால் பண்டங்கள் தயாரிக்கும் தொழிலுக்கு ரூ.12 லட்சம் வரையிலும், குளிரூட்டும் நிலையம் அமைக்க ரூ.30 லட்சம் வரையிலும், புறக்கடை கோழி வளர்ப்புக்கு ரூ.1.36 லட்சம் வரையிலும், பன்றி பண்ணை அமைக்க ரூ.6 லட்சம் வரையிலும் கடன் வழங்கப்படுகிறது. இதில் பொதுப்பிரிவினருக்கு 25 சதம், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு 33.33 சதம் மானியம் வழங்கப்படுகிறது.

ஆண் எருமைக் கன்றுகள் வளர்ப்புக்கு 1,000 கன்றுகள் வரையிலும் வளர்ப்பதற்கு ரூ.83.45 லட்சம் வரையிலும் திட்ட மதிப்பீடாகவும், இந்த திட்ட மதிப்பீட்டில் 10 சதம் பிணையத் தொகையாகவும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் பொதுப் பிரிவினருக்கு 25 சதம் அரசின் மானியமாகவும், தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு 33.33 சத மீதமுள்ள தொகை வங்கிக் கடனாகவும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொழில் செய்ய முன் வருபவர்களுக்கு மானியங்களை வழங்க நபார்டு வங்கி மூலம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இதுகுறித்த அறிவிப்பை ஒவ்வொரு கால்நடை மருத்துவமனையிலும், மருத்துவர்கள் விளம்பரப் பலகைகளிலும் எழுதி வைக்க வேண்டும். இம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் கால்நடை வளர்ப்பவர்கள் இந்த மானியம் சார்ந்த கடன் திட்டத்தைப் பயன்படுத்தி தொழில்கள் மேற்கொள்ள அருகிலுள்ள கால்நடை மருத்துவமனை மூலமாக விண்ணப்பித்து பயன் பெறலாம் என்றார் ஆட்சியர். கூட்டத்தில் கால்நடைத் துறை இணை இயக்குநர் பழனியப்பன், நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் ராகவன், மகளிர் திட்ட அலுவலர் சுப்பிரமணியன் மற்றும் கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றனர்.

**கரும்புக்கு டன்னுக்கு ரூ.3 ஆயிரம் வழங்க மதிமுக கோரிக்கை**

First Published : 18 Nov 2010 11:39:25 AM IST

தருமபுரி, நவ. 17: விவசாயிகளின் முக்கியப் பயிரான கரும்புக்கு டன்னுக்கு ரூ.3 ஆயிரம் விலை நிர்ணயம் செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தருமபுரி மாவட்ட மதிமுக கோரிக்கை விடுத்துள்ளது.

÷தருமபுரியில் புதன்கிழமை நடைபெற்ற கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

÷மற்ற முக்கியத் தீர்மானங்கள்:

தருமபுரி நகரில் சாலைகள் அனைத்தும் குண்டும், குழியுமாக உள்ளதால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. சாலைகளை போர்க்கால அடிப்படையில் சீரமைக்க நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு ரூ. 25 வழங்க வேண்டும். ஒகனேக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை விரைவுபடுத்த வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக் கூட்டத்துக்கு, மாவட்ட அவைத் தலைவர் வெ. சாமிக்கண்ணு தலைமை வகித்தார். மாவட்ட செயலர் வி.எஸ். சம்பத் சிறப்புரையாற்றினார். மாவட்டத் துணைச் செயலர்கள் மு. புத்திரன், எம். வைஜெயந்தி முத்தியாலு, மாவட்ட இளைஞரணிச் செயலாளர் பி.ராஜா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**மீண்டும் புத்துயிர் பெறும் கொய் மலர் சாகுபடி**

ஏ.பேட்ரிக்

First Published : 18 Nov 2010 10:17:10 AM IST

உதகை, நவ. 17: தேசிய தோட்டக் கலை இயக்கத்தின் சார்பில் வழங்கப்படும் மானியம் நடப்பாண்டில் 3 மடங்காக உயர்த்தப்பட்டுள்ளதையடுத்து, நீலகிரி மாவட்டத்தில் கொய் மலர் சாகுபடி தொழில் மீண்டும் புத்துயிர் பெறும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் தோட்டக் கலைத் துறை பயிர்களில் சாகுபடியினை மேம்படுத்துவதற்காக தேசிய தோட்டக் கலை இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இத்திட்டம் கடந்த 2001ம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டாலும், நீலகிரி மாவட்டத்தில் 2006ம் ஆண்டு முதல் தான் அமலுக்கு வந்தது. இத்திட்டத்தின் கீழ் பழப்பயிர் சாகுபடியை அதிகரித்தல், கொய்மலர் சாகுபடி மற்றும் இயற்கை வேளாண்மை, மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் உழவர் பயிற்சி திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

இதில் நீலகிரி மாவட்டத்தில் பழப்பயிர் சாகுபடிக்காக வாழை, கொக்கோ மற்றும் நெல்லிக்காய் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

கொய்மலர் சாகுபடியில் பல்வேறு பகுதிகளில் பசுமைக் குடில்கள் மூலம் இயற்கை வேளாண்மை முறையின் கீழ் மலர் சாகுபடி வலுப்படுத்தப்பட்டு வருகிறது. உழவர்களுக்கான பயிற்சி திட்டங்களில் மாவட்டங்களுக்குள்ளும், வெளி மாவட்டங்களிலும், வெளி மாநிலங்களிலும் விவசாயிகளுக்கு நவீன விவசாயம் குறித்த தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது.

கொய் மலர் சாகுபடியில் 500 சதுர மீட்டருக்குட்பட்ட பகுதிகளில் பசுமைக்குடில்கள் அமைத்து மலர் சாகுபடியில் ஈடுபட இதுவரை |3 லட்சம் கடனாகவும், அதில் |1.5 லட்சம் மானியமாகவும் அளிக்கப்பட்டு வந்தது. ஆனால், நடப்பாண்டில் இது அதிகரிக்கப்பட்டுள்ளது. கடனுதவியாக |4.67 லட்சமும், அதில் மானியமாக |2.33 லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொய்மலர் சாகுபடியை 1,000 ச.மீ.பரப்பளவிலும் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.9.35 லட்சம் கடனாகவும், இதில் |4.67 லட்சம் மானியமாகவும் வழங்கப்படுகிறது. இதன்மூலம் கொய் மலர் சாகுபடி தொழில் மாவட்டத்தில் மீண்டும் சூடுபிடிக்குமென்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே கொய் மலர் சாகுபடியில் ஈடுபட்டுள்ளவர்கள் வங்கிகளில் தாங்கள் பெற்ற கடனை முறையாக திருப்பி செலுத்துவதில்லை என்ற புகாரும் எழுந்துள்ளது. விவசாயக் கடன்கள் ஏற்கனவே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதைப்போல, தாங்கள் பெற்ற கடன்களும் தள்ளுபடி செய்யப்படுமென்ற எண்ணத்தில் வங்கிக் கடனை முறையாக திருப்பி செலுத்துவதில்லை என வங்கியாளர்கள் கூறுகின்றனர்.

தற்போது மாவட்டத்தில் ஏறத்தாழ 517 விவசாயிகள் கொய் மலர் சாகுபடியில் ஈடுபட்டுள்ள நிலையில் நாளொன்றுக்கு சராசரியாக 2 லட்சம் கொய் மலர்கள் வரை வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன.

இருப்பினும் மலர் சாகுபடி தொழில் தற்போது நலிவடைந்து விட்டதாகவும், உற்பத்தி செய்யப்படும் கொய் மலர்களுக்கு உரிய விலை கிடைப்பதில்லை எனவும் குற்றச்சாட்டுகள் உள்ளன.

இந்நிலையில் தற்போது தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் கடனுதவியும், மானியத் தொகையும் 3 மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் விவசாயிகள் முனைப்புடன் செயல்பட்டால் கொய்மலர் சாகுபடியில் மாவட்டத்தில் மீண்டும் ஒரு புரட்சியையே ஏற்படுத்த முடியுமென தோட்டக் கலைத் துறையினர் நம்பிக்கையுடன் கூறுகின்றனர். இந்தப் புரட்சி விவசாயிகளின் கையில் தான் உள்ளது.

**தாமிரபரணி பாசனத்தில் பிசான பருவ சாகுபடி பணிகள் தீவிரம்**

First Published : 18 Nov 2010 02:43:08 PM IST

அம்பாசமுத்திரம், நவ. 17: தாமிரபரணி பாசனத்தில் பிசான பருவ சாகுபடி பணிகள் தீவிரமடைந்துள்ளன. ஆனால், வடகிழக்குப் பருவ மழை எதிர்பார்த்தவாறு பெய்யாததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தாமிரபரணி வடிநில பாசனத்தில் நீண்டகால புள்ளி விவரங்களின்படி, சராசரியாக ஆண்டுதோறும் 1082 மி.மீ. மழை பெறப்படுகிறது. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து வருவதால், இவ்வடிநிலம் தன் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத பற்றாக்குறை வடிநிலமாக மாறி வருகிறது. நிகழாண்டு, கார் பருவத்தில் தென்மேற்கு பருவ மழை 35 சதவிகிதம் குறைவாகப் பெய்த காரணத்தால், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் முழு அளவில் பாசனம் நடைபெறவில்லை. அணைகளிலும் போதிய நீர் இருப்பு இல்லை. அக்டோபர் முதல்தேதியில் அணைகளின் நீர்மட்டம் குறைந்து காணப்பட்டது.

இதனிடையே, அக்டோபர் முதல்வாரத்தில் பெய்த மழையால் பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்தது. இதனால் பிசான பருவ சாகுபடிக்கு இவ்வாண்டு முன்கூட்டியே அக். 11-ம் தேதி அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது.

வடகிழக்குப் பருவ மழை அக்டோபர் மாத இறுதியில் தொடங்கிய போதிலும், எதிர்பார்த்தவாறு இல்லை. இதன் காரணமாக, பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து வருகிறது.

புதன்கிழமை (நவ. 17) அணைகளின் நீர்மட்டம் நிலவரம்: பாபநாசம் அணையின் நீர்மட்டம் 55.40 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 63.91 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 54.70 அடியாகவும் இருந்தது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 621 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 45 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

பாபநாசம் அணையில் இருந்து பாசனம், குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 1300 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. மணிமுத்தாறு அணையில் பெருங்கால் மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கு 35 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

**நீர்மட்டம் 50% குறைவு**

இவ்வாண்டு கார் பருவத்தில் இவ்விரு மாவட்டங்களில் பாசனம் பாதிக்கப்பட்ட காரணத்தால், நிகழ் பிசான பருவ சாகுபடிக்கு அணையில் இருந்து முன் கூட்டியே தண்ணீர் திறக்கப்பட்டது. இப்போது முழு அளவில் விவசாய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2009 ல் இதேநாளில் (17.11.2009) அணைகளின் நீர்மட்டம் நிலவரம்:

பாபநாசம் அணையின் நீர்மட்டம் 128.65, சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 142.15, மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 100.50 அடியாகவும் இருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டால், அணைகளின் நீர்மட்டம் 50 சதவிகிதம் குறைந்து காணப்படுகிறது.

இப்பருவத்தில் மழை பெய்து, மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 80 அடிக்கு மேல் அதிகரித்தால்தான், மணிமுத்தாறு பிரதான கால்வாய் மூலம் பாசனம் பெறும் 22,852 ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் வழங்க முடியும்.

பொய்த்து வரும் பருவ மழையால், பிசான பருவ சாகுபடிக்கு முழுமையாக தண்ணீர் கிடைக்குமா என்ற அச்சம் விவசாயிகளிடம் எழுந்துள்ளது.

**பூ, காய்கறி மார்க்கெட்டால் ஊராட்சிக்கு வருவாய் இழப்பு**

First Published : 18 Nov 2010 02:41:52 PM IST

வள்ளியூர், நவ. 17: காவல்கிணறு ஊராட்சிக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள பூ மற்றும் காய்கறி மார்க்கெட்டால் ஊராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக ஊராட்சித் தலைவர் ஞானசேகரன் மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்துள்ளார்.

காவல்கிணறில் தேசிய நெடுஞ்சாலையையொட்டி ஊராட்சிக்குப் பாத்தியப்பட்ட 3.25 ஏக்கர் நிலத்தில் தமிழ்நாடு தோட்டக்கலைத் துறை மூலம் பூ மார்க்கெட் அமைக்கப்பட்டு செயல்பட்டுவருகிறது.

இந்த மார்க்கெட் எதிர்பார்த்தவிதத்தில் செயல்படவில்லை. இங்கு, உற்பத்தி செய்யும் பூவை கொண்டு வருவதற்காக 250 விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் கொண்டுவரும் பூவை கொள்முதல் செய்ய வியாபாரிகளை தோட்டக்கலைத் துறை நிர்ணயித்துள்ளது. இங்கு 40-க்கும் மேற்பட்ட கடைகள் கட்டப்பட்டுள்ளன.

இக் கடைகளில் இருந்தும், பூ கொள்முதல் செய்யும் வியாபாரிகளிடமிருந்தும் ஊராட்சிக்கு எவ்வித வருவாயும் வந்துசேரவில்லை. ஊராட்சிக்குரிய நிலம்தான் விரயமாகிவிட்டது.

காவல்கிணறில் வளர்ச்சித் திட்டங்களுக்குரிய கட்டடங்கள் கட்ட நிலங்கள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், அதே பூ மார்க்கெட் உள்ள இடத்தில் காய்கறி மார்க்கெட்டையும் கடந்த மாதம் முதல் தொடங்கியுள்ளனர்.

காய்கறி மார்க்கெட் தொடங்குவது தொடர்பாக ஊராட்சிக்கு எவ்வித தகவலும் தெரிவிக்கவில்லை. ஊராட்சிக்குரிய நிலத்தை பூ மார்க்கெட் தொடங்குவதற்குதான் கொடுக்கப்பட்டது. ஆனால் விதிமுறைகளை மீறி காய்கறி மார்க்கெட் தொடங்கியுள்ளனர். ஏற்கெனவே, காவல்கிணறில் காமராஜர் காய்கறி மார்க்கெட் இயங்கி வருகிறது. இந்நிலையில், புதிதாக காய்கறி மார்க்கெட் தொடங்கியுள்ளதால் ஊராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது.

எனவே, ஆட்சியர் தலையிட்டு, பூ மற்றும் காய்கறி மார்க்கெட்டிலிருந்து உரிய வாடகை மற்றும் வரித் தொகையை ஊராட்சிக்கு செலுத்திட உத்தரவிடவேண்டும். செலுத்தாத பட்சத்தில், கடை உரிமத்தை ரத்து செய்ய ஊராட்சிக்கு அனுமதி வழங்கவேண்டும் என்றார் அவர்.

**அலங்கார மீன் உற்பத்தி: மானியத்துடன் பயிற்சி**

First Published : 18 Nov 2010 01:29:42 PM IST

புதுக்கோட்டை, நவ. 17: சில்லரை மீன் விற்பனை மற்றும் அலங்கார மீன் உற்பத்தி தொழில் செய்வோருக்கு மானிய உதவியுடன் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

""தேசிய மீன் வள மேம்பாட்டு வாரியம் மூலம் சில்லரை அங்காடி, அலங்கார மீன் உற்பத்தி, அலங்கார மீன் தொட்டி தயாரிப்பு, 25 சத மானியம், அலங்கார மீன் வளர்ப்பு ஆகியவற்றுக்கு 25 சதம் முதல் 100 சதம் வரையிலான மானிய உதவியுடன் பயிற்சியும் அளிக்கப்படவுள்ளது. மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: ""உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன் வளம்), எண்: 59, பைபாஸ் சாலை, மன்னார்புரம், திருச்சி - 20. தொலைபேசி எண்: 0431 - 2421173."

தினமலர்

**விதை நெல்லுக்கு தட்டுப்பாடு: நடவு பணிகளில் தடங்கல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,01:48 IST

ஆத்தூர்: சேலம் மாவட்டத்தில் பெய்யும் மழையை பயன்படுத்தி, விவசாயிகள் நெல் நடவு பணிகளை துவங்கியுள்ளனர். இந்நிலையில் வேளாண்மைத்துறை அலுவலகங்களில் விதை நெல் இருப்பு இல்லாததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். சேலம் மாவட்டம் ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, பெத்தநாயக்கன்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த சில வாரங்களாக தொடர் மழை பெய்து வருகிறது. அதனால் ஏரி, குளம், நீரோடைகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. மேலும், வசிஷ்ட நதி, சுவேத நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால், தடுப்பணைகள், அணைக்கட்டுகள் நிறைந்து உபரிநீர் வழிந்து செல்கிறது.

விவசாய கிணறுகளில் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. அதனால், ஆத்தூர் பகுதி விவசாயிகள் நெல் நடவு பணிகளை துவங்கியுள்ளனர். நெல் நடவுக்கு தேவையான விதை நெல் சம்மந்தப்பட்ட யூனியன் வேளாண்மைத்துறை அலுவலகங்களில் இருப்பு இல்லாமல் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. நெல் நடவு பணிகளை மேற்கொள்ள முடியாமல் வயல்களை உழுது தயார் செய்த விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். தனியார் கடைகளில் விதை நெல் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

ஆத்தூர், தலைவாசல் பகுதி விவசாயிகள் கூறியதாவது: பலத்த மழை பெய்து வருவதால் நெல் நடவு பணிகளுக்கு நிலங்களை உழுது விதைப்பு பணியில் ஈடுபட்டுள்ளோம். யூனியன் வேளாண்மை அலுவலகத்தில் விதை நெல் கிலோ 19.95 ரூபாய் நிர்ணயித்து மானியத் தொகை போக 14.95 ரூபாய்க்கு அரசு வழங்குகிறது. மேலும், தழைச்சத்து, மணிச்சத்து போன்ற உயிர் உரங்களும் விதை நெல்லுடன் வழங்கப்படுகிறது. தற்போது, வேளாண்மை அலுவலகங்களில் விதை நெல் இருப்பு இல்லாததால், தனியார் கடைகளில் கிலோ 23 முதல் 30 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர். வேளாண்மை அலுவலகத்தில் உடனடியாக விதை நெல் வழங்க வேண்டும், என்றனர்.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் உதயகுமார் கூறியதாவது: மாவட்டத்திலுள்ள 20 யூனியன்களிலுள்ள வேளாண்மை அலுவலகங்களில் ஏ.டி.டி., 45, 43, 36 மற்றும் வெள்ளை பொன்னி ஆகிய விதை நெல் விற்பனை செய்யப்படுகிறது. ஆத்தூர் வேளாண்மை அலுவலகத்தில் 40 டன், தலைவாசல் 50 டன், கெங்கவல்லி 40 டன் என மாவட்டம் முழுவதும் 400 டன் விதை நெல் அனுப்பி வைக்கப்பட்டது. வடகிழக்கு பருவ மழையை பயன்படுத்தி விவசாயிகள் நெல் நடவு பணிகளில் அதிகளவில் ஈடுபட்டுள்ளனர். அதனால், விதை நெல் இருப்பு இல்லாமல் விற்பனையாகியுள்ளது. தேவை அதிகரித்துள்ளதால் இம்மாத இறுதிக்குள் ஆத்தூர் பகுதிக்கு 15 டன் விதை நெல் அனுப்பி வைக்கப்படும், என்றார்.

**துவரை செயல் விளக்கத்திடல் வேளாண் கமிஷனர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,01:56 IST

மோகனூர்: மோகனூர் யூனியனில் அமைக்கப்பட்டிருந்த துவரை செயல்விளக்கத் திடல்களை வேளாண் துறை கமிஷனர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மோகனூர் யூனியனுக்கு உட்பட்ட பகுதியில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 27 ஏக்கர் பரப்பளவில் துவரைப் பயிர் செயல்விளக்கத் திடல் சாகுபடி அமைக்கப்பட்டுள்ளது. இந்த செயல்விளக்கத் திடல்

அமைத்த விவசாயிகளுக்கு விதை, உரம், உயிர் உரம் ஆகியவை முழு மானிய விலையில் வழங்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. அந்த செயல்விளக்கத் திடல்களை சென்னை வேளாண்துறை கமிஷனர் கோசலராமன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். விவசாயி முத்துசாமி என்பவரது தோட்டப் பயிரை ஆய்வு செய்த கமிஷனர் கோசலராமன், விளைச்சல் குறித்து விரிவாகக் கேட்டறிந்தார். வேளாண் இணை இயக்குனர் பிரபாகரன், வட்டார வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ, விதைச்சான்று இயக்குனர் சுப்பிரமணியம், வேளாண் அலுவலர்கள் ஜெகதீஷன், சுதா உட்பட பலர் பங்கேற்றனர்.

**மாட்டு சந்தையில் விற்பனை உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,02:14 IST

ஈரோடு: ஈரோடு மாட்டுச் சந்தையில் மாடு விற்பனை நேற்று நன்றாக இருந்தது. ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தை நேற்று கூடியது. சென்ற வாரத்தை காட்டிலும் மாடு வரத்து நன்றாக இருந்தது. சென்னை, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா மாநில வியாபாரிகள் மாடுகளை அதிகளவில் வாங்கிச் சென்றதால் விற்பனை நேற்று நன்றாக இருந்தது. வரும் வாரங்களிலும் மாடு விற்பனை நன்றாக இருக்கும் என வியாபாரிகள் கூறுகின்றனர். 400 சிந்து மாடுகளும், 300 எருமை மாடுகளும் விற்றன. சிந்து இன மாடுகள் 14 ஆயிரம் முதல் 29 ஆயிரம் ரூபாய் வரையும், எருமை மாடுகள் 12 ஆயிரம் முதல் 28 ஆயிரம் ரூபாய் வரையும் விலைபோனது.இவ்வாறு அவர் கூறினார்.

**நெல் பயிரில் உயிரியல் முறையில் நோய்களை கட்டுப்படுத்துதல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,01:35 IST

திருநெல்வேலி: வள்ளியூர் வட்டாரத்தில் பிசான நெல் சாகுபடி துவங்கியுள்ளது. நெல் பயிரில் தோன்றும் நோய்களை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த தொழில்நுட்பங்கள் உள்ளன. நோய்களை உண்டுபண்ணும் பூசணங்களை அழிக்கும் இயல்புடைய எதிர்உயிரி பாக்டீரியாவான சூடோமோனாஸ் மண்ணில் பயிர்களின் வேர்ப்பகுதியில் கூட்டம் கூட்டமாக வாழ்கின்றன. இதன் அறிவியல் பெயர் சூடோமோனஸ் ப்ளோரசன்ஸ் என்பதாகும்.நன்மை செய்யக்கூடிய பலவிதமான பாக்டீரியாக்களில் சூடோமோனாஸ் மிகவும் சக்திவாய்ந்தது.

இது விதையின் மேல்புறம் மற்றும் மண்வழிப் பரவும் நோய்களான வேரழுகல், தூர்வாடல், தண்டழுகல், இலைக்கருகல், குலைநோய், தானியம் நிறம் கெடுதல் போன்ற நோய்களை சிறப்பாக கட்டுப்படுத்துகிறது. உயிரினங்களுக்கு இது தீங்கு விளைவிப்பதில்லை. மேலும் உயிர்

உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, ரைசோபியம் ஆகியவற்றுடன் கலந்து பயன்படுத்தும் போது மண்ணில் உள்ள கரிம பொருட்களை பயன்படுத்தி பல மடங்காக பெருக்கி பயிருக்கு நீண்ட கால பாதுகாப்பை தருகின்றது.பயிரில் நோய் எதிர்ப்பு சக்தியை துரிதமாக தூண்டி சிக்கமான முறையில் நோய்களை கட்டுப்படுத்தி பயிர் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. இதனால் கணிசமான அளவு மகசூலும் கிடைக்கின்றன.

நெல் விதையுடன் நேர்த்தி செய்ய ஒரு கிலோ விதைக்கு 10கிராம் சூடோமோனாஸ் என்ற அளவில் கலக்க வேண்டும். பயிரில் மேல் தெளிக்க ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10கிராம் சூடோமோனாஸ் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.இவ்விதம் உயிரியல் முறையில் நோய்களை கட்டுப்படுத்தி உயிர்ச்சூழல் விவசாயத்தின் மூலம் உணவு உற்பத்தியை உயர்த்திட வேண்டுமென வள்ளியூர் வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) சத்தியஜோஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

**கொய்மலர் சாகுபடி "கொர்'...**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,00:00 IST



திண்டுக்கல்: தமிழகத்தில், ஊட்டி மற்றும் கொடைக்கானல் பகுதிகளில் மட்டுமே கொய்மலர் சாகுபடிக்கு ஏற்ற சீதோஷ்ணநிலை நிலவுகிறது.  தற்போது, கொடைக்கானலில் ஏழு ஹெக்டர் பரப்பளவில் கொய்மலர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேல்மலை, கீழ்மலை கிராமங்களில், 70 சதவீத விவசாயிகள் கொய்மலர் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.  இங்கு விளையும் ஜெர்ப்பூரா, காரனேஷன், ஆர்க்கிட் மலர்கள் அதிகளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. வட இந்திய மாநிலங்களில் கொடைக்கானல் கொய்மலருக்கு வரவேற்பு அதிகம். சமீபத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக வேர் அழுகல் நோய் தாக்கப்பட்டு, கொய்மலர் உற்பத்தி

குறைந்துள்ளது."மழைநீர் உள்ளே புகாதவாறு பசுமைக் குடில்களை அமைப்பதன் மூலம் இந்த பாதிப்பில் இருந்து கொய்மலர்களை காக்கலாம்,' என்று தோட்டக்கலைத்துறை கூறியுள்ளது.

**"பாக்கு" உற்பத்தி அமோகம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,00:00 IST



சேலம்: வாழப்பாடி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் ஆயிரத்து 500 ஹெக்டேர் பரப்பளவில் பாக்கு பயிராகிறது. பாக்கு உற்பத்தி தொழிலில் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆயிரக்கணக்கானவர்கள் ஈடுபட்டுள்ளனர். மரங்களில் இருந்து பறிக்கப்படும் பாக்கு காய்களை, தோலுரித்து, வேகவைத்து, பதப்படுத்தி "கொட்டைப்பாக்கு' உற்பத்தி செய்கின்றனர். பின், கொட்டைப்பாக்கு இரண்டாக வெட்டப்பட்டு, களிப்பாக்காக மாற்றப்படுகிறது. கும்பகோணம், சிதம்பரம், சீர்காழி, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை என பல நகரங்களுக்கு இங்கிருந்து பாக்கு செல்கிறது. கர்நாடகா, குஜராத், பீகார், உத்தரபிரதேசம், மத்தியபிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களிலும் வாழப்பாடி பாக்கு பிரசித்தம். விளைச்சல் குறைவால் கொட்டைப்பாக்கு விலை அதிகரித்து, தற்போது ஒரு கிலோ 135 முதல் 140 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இதனால், பாக்கு விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**வரத்து அதிகரிப்பால் வெங்காயம் விலை சரிவு! : திடீர் மாற்றம் தானே தவிர இனி ஏற்றம் தான்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,02:30 IST

திருச்சி: வரத்து அதிகரித்ததால் கடந்த இரண்டு நாட்களாக உச்சத்தில் இருந்த வெங்காயம் விலை நேற்று குறைந்திருந்தது. "வெங்காயம் விலையில் இது திடீர் மாற்றம் தானே தவிர, இனி விலை அதிகரிக்கத் தான் செய்யும்' என வியாபாரிகள் தெரிவித்தனர். திருச்சி மார்க்கெட்டுக்கு மஹாராஷ்டிரா, பெங்களூரு பகுதிகளிலிருந்து தான் பெரிய வெங்காயம் கொண்டு வரப்படுகிறது.

கிளை சிறைச்சாலை பகுதியில் 63 வெங்காய கமிஷன் மண்டிகள் இயங்குகின்றன. நாள் ஒன்றுக்கு 16 டன் எடை கொண்ட 24 "டாரஸ்' லாரிகள் மூலம் வெங்காயம் கொண்டு வரப்படுகின்றன. இங்கிருந்து தஞ்சாவூர், புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர், நாகப்பட்டினம் உள்பட பல்வேறு மாவட்டங்களுக்கு வெங்காயம் கொண்டு செல்லப்படுகிறது.

தமிழகம், கர்நாடகாவில் பெய்து வரும் கனமழை காரணமாக ஏராளமான வெங்காய பயிர்கள் அழுகிவிட்டன. பறித்த வெங்காயமும் அழுகும் அபாயத்தில் உள்ளன. சில ஆண்டுக்கு முன் வெங்காய விலையேற்றத்தால் டில்லியில் ஆட்சி மாற்றமே ஏற்பட்டதை யாரும் மறக்க முடியாது. கடந்த ஐந்து நாட்களாக 30, 35, 38, 40 என விற்ற ஒரு கிலோ வெங்காயம் முன்தினம் 46 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது.

இதனால், தமிழகம் முழுவதும் மக்கள் அதிர்ச்சியடைந்தனர். இதேபோல், சென்னை, டில்லி, மும்பை உள்பட பல்வேறு பகுதிகளில் வெங்காயம் விலை அதிகரித்துள்ளது. திருச்சிக்கு வெங்காயம் வரத்து அதிகரித்ததால் நேற்று சற்று விலை குறைந்து காணப்பட்டது. முன்தினம் 1,000 ரூபாய்க்கு விற்ற 50 கிலோ கொண்ட ஒரு மூட்டை பெங்களூரு வெங்காயம் மொத்த விலையில் நேற்று 600 ரூபாய்க்கு விற்றது. மஹாராஷ்டிரா பெரிய வெங்காயம் (பழசு) 1,800, 1,600 என்ற இரண்டு விலையில் விற்கப்பட்டது. சில்லரை விலை கடைகளில் 40, 42 எனவும், உழவர் சந்தைகளில் 38, 34 எனவும் விற்கப்படுகிறது.
"இந்த விலை இன்னும் உயர வாய்ப்புள்ளது' என வெங்காய வியாபாரிகள் தெரிவித்தனர்.

பெரிய வெங்காயம் விலை உயர்ந்துள்ளதால் டீக்கடை, பஜ்ஜி, போண்டா கடைகளில், வெங்காய "பஜ்ஜி' போடுவதை கடைக்காரர்கள் தற்காலிகமாக கைவிட்டுள்ளனர். தவிர, பிரியாணி கடைகளில் தயிர் சட்னியில் வெங்காயத்துக்கு பதிலாக முட்டைகோஸ், வெள்ளரி பயன்படுத்துகின்றனர். இதனால், வெங்காய பிரியர்கள் வருத்தத்தில் உள்ளனர்.
காய்கறி விலை நிலவரம்: நேற்றைய நிலவரப்படி காய்கறி விலை ஒரு கிலோவில்: தக்காளி 9, கத்தரி 24, பச்சைமிளகாய் 20, உருளை 18, கேரட் 28, பீட்ரூட் 10, அவரை 48, 36, 30, வெண்டை 12, 10, கொத்வரங்காய், புடலங்காய் 10, பீர்க்கங்காய் 14, 12, பாவற்காய் 18, முருங்கை 54, 45, முள்ளங்கி 14, 12, தட்டை 12, மாங்காய் 38, 26, பரங்கி, பூசணி, சுரை 5, இஞ்சி 34, கருணை 20, சேனை 24, சேப்பை 20, சின்னவெங்காயம் 20, பெரியவெங்காயம் 38, 34, பீன்ஸ் 26, கோஸ் 10, சவ்சவ் 8, பட்டானி 80, காளிஃபிளவர் 12, 10, 8 ரூபாய் என விற்கப்பட்டது. ஒரு கட்டு மல்லி 14, புதினா 12, கருவேபில்லை 18 என விற்றது.

**சின்ன வெங்காயம் அறுவடை பாதிப்பு: விலை "கிடுகிடு' உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,00:51 IST

உடுமலை : ஏற்றுமதி வாய்ப்புகள் முற்றிலுமாக குறைந்துள்ள நிலையில், தமிழ்நாட்டில் முக்கிய உற்பத்தி மாவட்டங்களில் சின்ன வெங்காயம் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதால் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. அறுவடை துவங்கியதும் வரத்து சீராகி விலை குறையும் வாய்ப்புள்ளது.தமிழ்நாட்டில் நாமக்கல், ராசிபுரம், பெரம்பலூர், திண்டுக்கல், ஆம்பூர், உடுமலை ஆகிய பகுதிகளில் சின்னவெங்காயம் அதிகளவு பயிரிடப்படுகிறது. சீசன் சமயங்களில் உற்பத்தி அதிகரிப்பதால் விலை பல மடங்கு சரிந்து விவசாயிகள் பாதிப்பிற்குள்ளாகி வருகின்றனர்.

நேபேட் நிறுவனம் மூலம் வெங்காயம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கொள்முதல் செய்யப்பட்டு இலங்கை மற்றும் மலேசியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதனால், விலை சரிவு தடுக்கப்பட்ட நிலையில், நேபேட் கொள்முதல் சில மாதங்களிலேயே நிறுத்தப்பட்டது.ஏற்றுமதி வாய்ப்புகள் குறைந்த நிலையில், ஒவ்வொரு சீசனிலும் விலை சரிவை சந்தித்து நஷ்டத்திற்கு ஆளான உடுமலை பகுதி விவசாயிகள் சின்ன வெங்காய சாகுபடியை கைவிட்டு மாற்றுப்பயிருக்கு மாறினர்.இதனால், கடந்த சீசனில் பி.ஏ.பி., இரண்டாம் மண்டல பாசனத்திற்கும், தென்மேற்கு பருவமழைக்கும் குறைந்தளவே வெங்காயம் இப்பகுதியில் பயிரிடப்பட்டது. பிற மாவட்டங்களிலிருந்து வரத்து பெறப்பட்டு உள்ளூர் சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டு வந்தது.

இந்நிலையில், மாநிலத்தின் முக்கிய உற்பத்தி பகுதிகளான நாமக்கல் உட்பட பகுதிகளில் மழை "ஜல்' புயல் காரணமாக அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டு வரத்து குறைந்தது. இதனால், கோவை, திருப்பூர் மாவட்டத்தில் சின்னவெங்காயத்தின் விலை கிடு... கிடுவென உயர்ந்து வருகிறது. உடுமலை பகுதியில் தற்போது புதிதாக அறுவடை செய்யப்படும் சின்னவெங்காயம் கிலோ அதிகபட்சமாக 20 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகிறது. இருப்பு வைக்கப்பட்டிருந்த பழைய வெங்காயம் 30 ரூபாய் வரையிலும் கொள்முதல் செய்யப்படுகிறது.இது குறித்து மொத்த வியாபாரிகள் கூறுகையில், இலங்கைக்கு ஏற்றுமதி முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மலேசியாவிற்கு மட்டும் சின்னவெங்காயம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 150 டன் வரை ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது.

தற்போது, பல்வேறு பிரச்னைகளால் இந்த ஏற்றுமதியும் பாதிக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதி வாய்ப்புகள் இல்லாத நிலையில் அறுவடை சீசன் துவங்கியதால் விலை சரியும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பல மாவட்டங்களில் மழை காரணமாக அறுவடை பணிகள்

பாதிக்கப்பட்டுள்ளது விலையேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.இன்னும் சில நாட்களில் நாமக்கல், ராசிபுரம், திண்டுக்கல், பெரம்பலூர் போன்ற பகுதிகளிலிருந்து சின்ன வெங்காய வரத்து துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வரத்து சீரானால் விலை குறையும்', என்றனர்.

**அசோலா சாகுபடி நவ.,19ல் பயிற்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,01:59 IST

நாமக்கல்: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 19ம் தேதி அசோலா சாகுபடி முறை மற்றும் கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்தும் வழிமுறை குறித்து ஒரு நாள் பயிற்சி நடக்கிறது. திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் வெளியிட்ட அறிக்கை: வேளாண் அறிவியல் நிலையத்தில் நவம்பர் 19ம் தேதி நடக்கும் அசோலா சாகுபடி முறை குறித்த பயிற்சியில் அசோலா ரகம், உற்பத்தி முறை, வளரிடம், அசோலாவில் உள்ள சத்துக்கள், கால்நடை மற்றும் கோழிகளுக்கு தீவனமாக அளிக்கும் முறை பற்றி பயிற்சியளிக்கப்படுகிறது.

மேலும், செயல்விளக்கமும் செய்து காண்பிக்கப்படுகிறது. அந்தப் பயிற்சியில் விவசாயிகள், பண்ணையாளர், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளோர் பங்கேற்கலாம். விருப்பமுள்ளோர் மோகனூர் சாலையில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 18ம் தேதிக்குள் நேரிலோ அல்லது 04286-266345, 266244 ஆகிய ஃபோன் எண்களிலோ தொடர்பு கொண்டு பெயர் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பூக்கள் விலை ஒரே நாளில் ரூ.150 வரை உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,00:10 IST

கோயம்பேடு : முகூர்த்த நாளையொட்டி, கோயம்பேடு மார்க்கெட்டில் பூக்கள் விலை நேற்று திடீரென உயர்ந்ததால் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்தனர்.கோயம்பேடு மார்க்கெட்டிற்கு திருவள்ளூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், மதுரை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து பூக்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. ஒவ்வொரு நாளும், வரத்து மற்றும் பண்டிகை காலத்தை பொறுத்து விலை நிர்ணயிக்கப்படும்.திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் மற்ற நாட்களைவிட பூக்கள் விலை கூடுதலாக இருக்கும்.

செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் கோவில்கள், வீடுகளில் பூஜைக்காக பூக்கள் அதிகம் பயன்படுத்துவதே இதற்கு காரணம்.இது மட்டுமின்றி சுபமுகூர்த்தம், பண்டிகை உள்ளிட்ட விஷேச நாட்களிலும் பூக்கள் கூடுதல் விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால், சில நாட்களை தவிர மற்ற நாட்களில், விவசாயிகளிடம் ஒரே விலை நிர்ணயம் செய்து, பூக்களை வியாபாரிகள் வாங்கி விற்று லாபம் பார்க்கின்றனர்.இதனால், பூக்களை விளைவிக்கும் விவசாயிகள் எதிர்பார்த்த அளவிற்கு லாபம் கிடைக்காமல் மிகுந்த ஏமாற்றத்திற்கு ஆளாகியுள்ளனர். வியாபாரிகள் சில நாட்களில் அதிக லாபம் கிடைக்காவிட்டாலும், நஷ்டத்திற்கு ஆளாகாமல் தப்பி விடுகின்றனர்.

இன்று, முகூர்த்த நாள் என்பதால், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் திருமணம், கிரகப்பிரவேசம் உள்ளிட்ட விஷேச நிகழ்ச்சிகள் அதிகளவில் நடக்கிறது. இதை காரணமாக வைத்து, நேற்று கோயம்பேடு மார்க்கெட்டில் பூக்கள் அதிரடியாக விலை உயர்த்தி விற்பனை செய்யப்பட்டன.நேற்று முன்தினம் கிலோ 250 முதல் 300 ரூபாய் வரை விற்கப்பட்ட ஒரு கிலோ மல்லிகை பூ, நேற்று 300 முதல் 450 ரூபாய் வரை விற்கப்பட்டது.

இதேபோல 240 முதல் 250 ரூபாய் வரை விற்கப்பட்ட ஜாதிமல்லி, 300 ரூபாய்க்கு எகிறியது.குயின் ரோஜாப்பூ கிலோ 50 முதல் 60 ரூபாய்க்கும், கனகாம்பரம் 300 முதல் 400 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. ஒரே நாளில் பூக்கள் விலை கிலோவிற்கு 150 ரூபாய் வரை உயர்ந்ததால் பொதுமக்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர்.திருமணம் உள்ளிட்ட விசேஷ நிகழ்ச்சிக்காக வீட்டிற்கு தேவையான பூக்கள் வாங்க மார்க்கெட்டிற்கு வந்த பெண்கள், விலையை கேட்டு கண்ணீர் வராத குறையாக அதிர்ச்சியுடன் அவற்றை வாங்கி சென்றனர்.

**கரும்பு சாகுபடியில் இயந்திரங்கள் விவசாய இளைஞர்களுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 18,2010,23:39 IST

கடலூர் : கரும்பு சாகுபடியில் இயந்திரங்கள் பயன்படுத்துதல் தொடர்பாக விவசாய இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இது குறித்து கடலூர் வேளாண்மை பொறியியல் துறை உபகோட்ட உதவி செயற்பொறியாளர் பாண்டியன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: கடலூர் மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் கிராமப்புற விவசாயிகள் மற்றும் இளைஞர்களுக்கு 2010-11ம் ஆண்டிற்கான கரும்பு சாகுபடி செய்வதில் வேளாண் கருவிகள் பயன்படுத்துவது தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளது.

அதில் கரும்பு விவசாயத்திற்கு பயன்படும் கருவிகளான கரும்பின் கரணை பார் அமைத்து நடவு செய்யும் கருவி, கரும்பு தோகை துகளாக் கும் கருவி, அறுவடை இயந்திரம், பட்டை சீவி பாரில் உழவு செய்யும் கருவி,  களை எடுக்கும் கருவி போன்ற இயந்திரங்களின் தொடர்பாக பயிற்சிகள், நீர் நிர்வாகம், சொட்டு நீர்பாசனம் போன்றவற்றிற்காக பயிற்சி அளிக்கப்படு கிறது.இந்த பயிற்சி 20 பேர்களுக்கு மட்டும் கடலூர் சின்னகங்கணாங்குப்பம் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் வரும் 29ம் தேதி முதல் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியில் பங்கு பெற விருப்பமுள்ள 18 முதல் 40 வயதிற்குட்பட்டவர்கள் இம்மாதம் 26ம் தேதிக்குள் கடலூர் உதவி செயற்பொறியாளரை அணுகி பெயரை பதிவு செய்து கொள்ளுமாறு கேட் டுக் கொள்ளப்படுகிறார் கள்.இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தினத் தந்தி

## ***சென்ற 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் தாவர எண்ணெய் இறக்குமதி 92.40 லட்சம் டன்னாக உயர்வு***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

புதுடெல்லி

சென்ற 2009-10ஆம் ஆண்டு எண்ணெய் பருவத்தில் (நவம்பர் - அக்டோபர்) நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி 92.40 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இதன் மதிப்பு ரூ.38,000 கோடியாகும்.

தனிநபர் பயன்பாடு

உள்நாட்டில் தனிநபர் சமையல் எண்ணெய் பயன்பாடு அதிகரித்து வருகிறது. இந்த நிலையில், இறக்குமதி செய்யப்படும் தாவர எண்ணெய் விலை குறைந்ததையடுத்து, இறக்குமதி புதிய சாதனை அளவை எட்டி உள்ளது.

சென்ற பருவத்தில், சமையல் எண்ணெய், வனஸ்பதி மற்றும் இதர பயன்பாடுகளுக்கான தாவர எண்ணெய் இறக்குமதி மிகவும் அதிகரித்துள்ளது. 1994-ஆம் ஆண்டில், தாவர எண்ணெய் வகைகள் இறக்குமதிக்கு அனுமதி அளிக்கப்பட்டது. அதன் பிறகு தற்பொழுதுதான் இறக்குமதி 92.40 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. சென்ற 2008-09-ஆம் எண்ணெய் பருவத்தில் தாவர எண்ணெய் இறக்குமதி 86.60 லட்சம் டன் என்ற அளவில் இருந்தது என இந்திய சமையல் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பருவத்தில்...

இம்மாதம் தொடங்கிய புதிய பருவத்தில் நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி 95 லட்சம் டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நடப்பு பருவத்தில் பாமாயில் 72 லட்சம் டன்னும், சோயா எண்ணெய் 15 லட்சம் டன்னும், சூரியகாந்தி எண்ணெய் நான்கு லட்சம் டன்னும் இறக்குமதி செய்யப்படும். இதர சமையல் எண்ணெய் வகைகளின் இறக்குமதி ஒட்டுமொத்தத்தில் நான்கு லட்சம் டன்னாக இருக்கும் என சமையல் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பற்றாக்குறை

கடந்த 2000-01-ஆம் ஆண்டு பருவத்துடன் ஒப்பிடும்போது, தற்போது நம் நாட்டில் சமையல் எண்ணெய் இறக்குமதி 6.5 சதவீதம் உயர்ந்து 1.47 கோடி டன்னாக அதிகரித்துள்ளது. இது, 2015-ஆம் ஆண்டில் 2 கோடி டன்னாக உயரும் என ரேபோ ஃபைனான்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சமையல் எண்ணெயைப் பொறுத்தவரை, நம் நாடு கடந்த 1994-95-ஆம் ஆண்டு பருவத்தில் 5 சதவீதமே இறக்குமதியை சார்ந்திருந்தது. இது, தற்போது 50 சதவீதமாக உயர்ந்துள்ளது என சமையல் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. 2009-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்துடன் நிறைவடைந்த பருவத்தில் ரூ.28,000

கோடிக்கு சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அடுத்த 10 ஆண்டுகளில் உள்நாட்டில் சமையல் எண்ணெய்க்கான பற்றாக்குறை 1.77 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற 2009 காலண்டர் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த சமையல் எண்ணெய் இறக்குமதியைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 10.3%–ஆக குறைந்தது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், நவம்பர் 6–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 10.3 சதவீதமாக குறைந்துள்ளது. இது, இதற்கும் முந்தைய வாரத்தில் 12.3 சதவீதமாக மிகவும் அதிகரித்து காணப்பட்டது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், உள்நாட்டு மீன்கள் (7%), உளுந்து (4%), பார்லி (3%), சோளம் (2%), பால், கம்பு மற்றும் துவரம் பருப்பு (தலா 1%) போன்றவற்றின் விலை குறைந்திருந்தது.

அதேசமயம், கறிக்கோழி (2%), கடலை பருப்பு (1%), இறைச்சி மற்றும் பால் பொருள்கள் போன்றவற்றின் விலை சென்ற ஆண்டு இதே வாரத்துடன் ஒப்பிடும்போது அதிகரித்து காணப்பட்டது. பருப்பு வகைகளின் விலையும் 19.4 சதவீதம் உயர்ந்திருந்தது.

நாட்டின் பணவீக்கத்தை குறைக்கும் வகையில் பாரத ரிசர்வ் வங்கி முக்கிய

*கடன்களுக்கான வட்டி விகிதத்தை உயர்த்தியது. இந்த நிலையில், சென்ற செப்டம்பர் மாதத்தில், தொழில் துறை உற்பத்தி வளர்ச்சி கடந்த 16 மாதங்களில் இல்லாத அளவிற்கு 4.4 சதவீதமாக குறைந்துள்ளது. எனவே, ரிசர்வ் வங்கி நடப்பு ஆண்டில் முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை மேலும் உயர்த்தாது என்ற மதிப்பீடும் உள்ளது.*

*மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் நாட்டின் ஒட்டுமொத்த பணவீக்கம் சென்ற அக்டோபர் மாதத்தில் 8.58 சதவீதமாக குறைந்துள்ளது. இது, செப்டம்பர் மாதத்தில் 8.62 சதவீதமாக சற்று உயர்ந்திருந்தது.*

## ***ஈரோட்டில் மஞ்சள் விலை ஒரே நாளில் குவிண்டாலுக்கு ரூ.800 விலை உயர்ந்தது***

*ஈரோடு, நவ. 19–*

*ஈரோட்டில் ஒரே நாளில் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு ரூ.800 விலை உயர்ந்து உள்ளது.*

*மஞ்சள் ஏலம்*

*ஈரோடு மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மஞ்சள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மற்றும் தனியார் விற்பனைக்கூடம், கூட்டுறவு விற்பனை கூடத்தில் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.*

*ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு நேற்று மொத்தம் 1,883 மஞ்சள் மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வந்து இருந்தார்கள். இதில் தனி விரலி (குவிண்டால்) அதிகபட்சமாக ரூ.15 ஆயிரத்து 405–க்கும், தனி கிழங்கு மஞ்சள் அதிகபட்சமாக ரூ.15 ஆயிரத்து 498–க்கும் விற்பனையானது. நேற்றுமுன்தினம் தனி விரலி மஞ்சள் ரூ.14 ஆயிரத்து 745–க்கும், தனி கிழங்கு மஞ்சள் ரூ.14 ஆயிரத்து 669–க்கும் விற்பனையானது.*

*ரூ.800 விலை உயர்வு*

*தனி விரலி மஞ்சள் ஒரே நாளில் குவிண்டாலுக்கு ரூ.660, கிழங்கு மஞ்சள் ரூ.829 விலை உயர்ந்து உள்ளது. இந்த விலை உயர்வினால் ஏலத்துக்கு கொண்டு வந்து இருந்த 1,833 மஞ்சள் மூட்டைகளில் 1795 மூட்டைகளை விவசாயிகள் விற்பனை செய்தனர். ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் நேற்று முன்தினத்தை விட நேற்று தனி விரலி மஞ்சள்*

*குவிண்டாலுக்கு ரூ.720, தனி கிழங்கு மஞ்சள் ரூ.750 விலை உயர்ந்து விற்பனையானது. ஒரே நாளில் மஞ்சளின் விலை குவிண்டாலுக்கு ரூ.660 முதல் ரூ.829 வரை விலை உயர்ந்து உள்ளது மஞ்சள் விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.*

## கொலக்கம்பை பகுதிகளில் தொடர் மழை: காய்கறி பயிர்கள் அழுகும் அபாயம்



கொலக்கம்பை பகுதியில் தொடர்மழையினால் மேரக்காய் கொடிகள் அழுக தொடங்கி உள்ளதை படத்தில் காணலாம்.

*கொலக்கம்பை, நவ.19–*

*கொலக்கம்பை மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களான தூதூர்மட்டம், டெராமியா, சேலாஸ், கிளிஞ்சடா, அதிகரட்டி, கைக்காட்டி, மஞ்சக்கொம்பை, கரும்பாலம், கோட்டக்கல் உள்ளிட்ட பகுதி களில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகின்றது. இதனால் இந்த பகுதிகளில் உள்ள நீரோடை கிணறு, குளம், ஏரிகளில் நீர்வரத்து அதிகமாக காணப்படுகிறது. மேலும் வனப்பகுதிகளில் மழையினால் கொசுக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கொசு தொல்லை களால் வன விலங்குகள் வனப் பகுதியை விட்டு வெளியே வருகின்றன.*

*மழையினால் வனப்பகுதிகளில் இருந்து மழை நீரால் அடித்து வரப்பட்டுள்ள அட்டை பூச்சிகள் தேயிலை தோட்ட தொழிலாளர்களின் ரத்தத்தை உறிஞ்சி வருகின்றன. இதனால் தேயிலை தோட்ட தொழி லாளர்கள் பெரும் அவதி யடைந்து வருகின்றனர். கொலக் கம்பை பகுதிகளில் விவசாயம் செய்துள்ள மேரக்காய், முட்டைகோஸ்,*

முள்ளங்கி போன்ற காய்கறிகள் தற்போது பெய்துவரும் மழையினால் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் நேற்று முன்தினம் முதல் விடிய, விடிய காற்றுடன் கூடிய பலத்த மழையினால் கெரடாலீஸ், தூதூர்மட்டம், டெரேமியா, கொலக்கம்பை ஆகிய பகுதிகளில் மின் தடை ஏற்பட்டது. மின்சார ஊழியர்கள் நேற்று சீரமைப்பு பணியில் ஈடுபட்டு, மின் வினியோகத்தை சரி செய்தனர். குன்னூர்– கொலக்கம்பை சாலையில் லேசான மண்சரிவும், சிறிய, சிறிய மரங்களும் விழுந்தன. ஆனால் போக்குவரத்து பெரிய அளவில் பாதிப்படைய வில்லை. தொடர் மழையினால் சில தனியார் தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு நேற்று விடுமுறை அளிக்கப்பட்டது.

**மஞ்சூர் பகுதியில் பலத்த மழை: காய்கறி பயிர்கள் தண்ணீரில் மூழ்கின**

மஞ்சூர், நவ.19–

மஞ்சூர் பகுதியில் பலத்த மழையினால் காய்கறி பயிர்கள் தண்ணீரில் மூழ்கின.

பலத்த மழை

மஞ்சூர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை விடிய, விடிய பலத்த மழையாக பெய்தது. மஞ்சூர், எமரால்டு, கோத்தகண்டி மட்டம், இத்த லார், முத்தொரை பாலாடா, நஞ்சநாடு, மணியட்டி, கல்லக் கொரை, மீக்கேரி உள்பட குந்தா தாலுகா பகுதிகளில் பலத்த மழை கொட்டியது.

நீலகிரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முழுவதும் மழை பெய்திருந் தாலும், குந்தா தாலுகா பகுதியில் தான் அதிகபட்ச மழை பெய்து உள்ளது. இங்கு 90 மி.மீ. மழை பெய்தது.

அணைகள் நிரம்புகின்றன

இந்த மழையினால் சாலை களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. ஒரு சில இடங்களில் லேசான மண்சரிவு ஏற் பட்டது. ஆனால் போக்கு வரத்து பாதிக்கப்படவில்லை. கோரக்குந்தா, அப்பர் பவானி, அண்ணா நகர் ஆகிய இடங்களில் சாலையோரங் களில் இருந்த மரங்கள் ரோட்டின் குறுக்கே விழுந்தன. அதே நேரத்தில் இந்த மரங்கள் விழுந்ததில் போக்குவரத்துக்கு எந்தவித பாதிப்பும் ஏற்பட வில்லை. பலத்த மழையினால் எமரால்டு, அவலாஞ்சி, குந்தா, அப்பர்பவானி போன்ற அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் நீர்மட்டம் மெல்ல, மெல்ல உயர்ந்து வருகிறது.

தண்ணீரில் மூழ்கின

எமரால்டு, கோத்தகண்டி, இத்தலார், முத்தொரை பாலாடா, நஞ்சநாடு, கல்லக் கொரை, மணியட்டி, மீக்கேரி ஆகிய பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களுக்குள் தண்ணீர் புகுந்தது. இதனால் அங்கு பயிரிடப்பட்டு, அறு வடைக்கு தயார் நிலையில் இருந்த உருளைக்கிழங்கு, கேரட், பீன்ஸ் போன்ற காய்கறி கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. இதனால் காய்கறிகள் அழுகும் அபாயம் உள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இதே போன்று தொடர்ந்து மழை பெய்தால் வீடுகள் இடியும் அபாயம் உள்ளது. மேலும் மழையினால் குந்தா பகுதியில் கடுங்குளிர் நிலவுகிறது.

## கிளைகோஸ் பயிரிட்ட விவசாயிகள்



நீலகிரி மாவட்டத்தில் அதிகளவு இங்கிலீஸ் காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் கிளைகோஸ் பயிர் ஊட்டி கோடப்பமந்து பகுதியில் அதிகளவு பயிரிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு கிளைகோசிற்கு நல்ல விலை கிடைக்கும் என்று விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.